[1979 மார்ச் 14

7. அறிவிப்ப

ஆளுநர் இசைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(இ) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப் படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று கோருகிறேன்.

இந்தச் சட்டத்தை நான் முன்மொழியும்போது, சில கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். நகர்ப்புறத்தில் இருக்கிற நிலங்களுக்கு உச்சவரம்பு சட்டம் கொண்டு வருகிறபோது சில விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தர்ம ஸ்தாபனம், மத ஸ்தாபனம் மற்றும் பொது ஸ்தாபனங்களுக்கு எல்லாம் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதிவிலக்கு அளிக்க பட்டிக்கிறபோது அந்தச் சட்டத்தின்படி அவர்கள் அந்த நிலங்களை குறிப்பிட்ட ஸ்தாபனங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள லாம். பயன்படுத்திக் கொள்ளும் காலம் போக, அதுபற்றி அரசுக்குத் தெரிவித்து விட்டு 120 நாட்களுக்குப் பிறகு அதை அவர்கள் அரசுக்கு வேண்டுமானால் கொடுக்கலாம். அரசு வாங்க மறுத்துவிட்டால் வேறு யாருக்காவது விற்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அப்படி உரிமை இருக்கிறபோது, இன்றைக்கு நகரில் இருக்கிற நிலங்களுக்கு விலை அதிகமாக இருக்கிறது. இந்தச் சட்டத்தில் எப்படி கொண்டுவந்திருக்கிறோம் என்றால் அப்படி அளிக்கப்பட்ட விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிட்ட அந்த ஸ்தாபனங்களுக்கு தேவையான காலம்

---

* 1979, பிப்ரவரி 19 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1979 மார்ச் 14] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

வரையில் பயன்படுத்திக் கொள்ளலாம். தேவையில்லாதபோது அதை அரசு தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இன்றைக்கு சட்டத்தில் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், சென்னையில் இருக்கிற நிலம் ஒரு கிரவுண்டுக்கு 2,000 ரூபாயிலிருந்து 1,20,000 ரூபாய் வரையில் இருக்கிறது. மதுரையில் இருக்கிற நிலம் ஒரு கிரவுண்டுக்கு 1,500 ரூபாயிலிருந்து 81,000 ரூபாய் வரையில் இருக்கிறது. கோவையில் 2,000 ரூபாயிலிருந்து 81,000 ரூபாய் வரையில் இருக்கிறது. சேலத்தில், 6,000 ரூபாயிலிருந்து 1,32,000 ரூபாய் வரையில் ஒரு கிரவுண்டுக்கு விலை இருக்கிறது.

(முற்பகல் 11-40)

திருச்சிராப்பள்ளியில் ஒரு கிரவுண்டின் விலை ரூபாய் 600-லிருந்து ரூபாய் 43,000 வரை இருக்கின்றது. திருநெல்வேலியில் ஒரு கிரவுண்ட் விலை ரூபாய் 50 லிருந்து ரூபாய் 19 ஆயிரம் வரை இருக்கின்றது, இன்றைக்கு சந்தை விலை இப்படி இருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற சட்டப்படி தர்ம ஸ்தாபனங்களின் நிலங்களை அரசு எடுத்துக்கொள்வதாக இருந்தால் இப்படிப்பட்ட அதிகமான விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. இது மிக அதிகமாக இருக்கிறது என்பதற்காகத்தான் விதிவிலக்கை ரத்து செய்கின்ற அளவில், நில உச்சவரம்புச் சட்டப்படி நிலங்களை எடுத்துக்கொள்ளும் போது எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப் படுகிறதோ அப்படி கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த சட்ட முன்வடிவு வந்திருக்கிறது என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நான் முதலிலேயே சொல்கிற போது சென்னை மாநகராட்சியிலே ஒரு கிரவுண்ட் விலை ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாய் வரை இருக்கிறது என்று சொன்னேன். ஆனால் கொண்டுவரப் படுகின்ற சட்டத்தின்படி ஒரு கிரவுண்ட் விலை 11 ஆயிரத்திலிருந்து 50 ரூபாய் வரை வரும். மதுரையில் இன்றைக்கு சந்தை விலை ரூபாய் 81,600லிருந்து ரூபாய் 1500 ஆக இருக்கின்றது. ஆனால், இன்றைக்குக் கொண்டுவரப்படுகின்ற சட்டத்தின்படி மதுரையில் ஒரு கிரவுன்டின் விலை ரூபாய் 5,574—லிருந்து ரூபாய் 22 வரை வரும். சேலம் திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களில் கிரவுண்டின் சந்தை விலை அதிகமாக இருந்து வருகின்ற காரணத்தால்தான் இப்படிப் பட்ட சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, நகராட்சி நில உச்சவரம்புச் சட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை எல்லா நகரங்களும் வளர்ந்து வருகின்ற நகரங்களாக இருக்கின்றன. கிராமங்களில் மக்களுக்குத் தேவையான வாய்ப்பு, வசதிகள் குறைந்து போனதன் காரணமாக, கெட்டும் பட்டணம் சேர் என்ற பழமொழிக்கிணங்க இன்றைக்கு மக்கள் நகரங்களில் குடியேறி வருகிறார்கள். தெருக்களிலும், சந்தைகளிலும் இன்று ஏழை எளிய மக்கள் படுகின்ற அவஸ்தையைப்பார்க்கின்றபோது மிக வேதனையாக இருக்கின்றது. ஆகவே நம்முடைய அரசு நகரங்களில் இருக்கின்ற நிலங்களை நிலஉச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் எடுத்து மக்களுக்குக் குறைந்த விலையில் இடம் ஒதுக்கித்தர வேண்டும். அதன்மூலம் அவர்கள் படுகின்ற துன்பத்திற்கு ஒரு எல்லை காண வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை போன்ற நகரங்களில் மக்கள் வாழ்கின்ற நிலை மிகவும் மோசமாக இருக்கின்றது. ஆகவே நகரங்களில் இருக்கின்ற புறம்போக்கு நிலங்களை நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுத்து ஏழை மக்களுக்கு அவர்களுடைய வருவாயின் அடிப்படையில் குறைந்த விலை நிர்ணயம் செய்து பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்".

1979 மார்ச் 14]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகிறது.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் மூலம் மாநகராட்சி மற்றப் பகுதிகளுக்கு மட்டும் வரிவிதிப்பு செய்வதன்மூலம் இந்த அரசுக்கு எவ்வளவு ரூபாய் கிடைக்கப் போகிறது என்பதையும் அதன்மூலம் பல்வேறு நல்ல பணிகளைச் செய லாக்குவதற்கு இந்த வரியின் மூலம் கிடைக்கிற தொகையை எந்த வகையில் பயன்படுத்தப் போகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சி மற்றப் பகுதிகளில் ஓட்டுகிற வாகனங்களுக்கு இப்படி ஒரு கூடுதல் வரி விதிக்க வேண்டும் என்பது வரவேற்கத் தக்க ஒன்றாகும். அந்த வகையில் போக்குவரத்துக் கழகங்களுக்கு விதிக்கப்படுகிற இந்த வரிகள் நம்முடைய போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சிக் காகச் செலவிடப்படுகிற நிலையில், மக்கள் எந்தளவிற்கு இன்னல்களை ஏற்றிருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் பல்வேறு நல்ல காரியங்களை எல்லோரும் பாராட்டுகிற அளவிற்கு, மிகச் செம்மையாக, சிறப்பாக ஆற்றியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டாக வேண்டும், பல்வேறு போராட்டங்களை, பல்வேறு பிரச்னைகளை சந்திக்க வேண்டிய நேரங்களிலெல்லாம் திறமையான முறையில் மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு திறமையான நிர்வாகத்தை நடத்துவதன்

* 1979, பிப்ரவரி 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.